# "நான் இருக்கிறேன்"

# [8:12-59]

இந்த நாட்களில் தொடர்ந்து எழும்பிக் கொண்டுள்ள ஒரு வார்த்தையை நான் சமீபத்தில் கவனிக்கத் தொடங்கினேன். இந்த வார்த்தையானது பல அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியுமென்று நான் யூகிக்கின்றேன், ஆனால் இது அடிப்படையாகக் கலந்துரையாடல்களை முடிக்கப் பயன்படுத்தப்படுவதாகக் காணப்படுகின்றது. முதலில், நான் இது வாலிப வயதுடையவர்களால் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாக நினைத்தேன், ஆனால் எல்லாத் தலைமுறையினரிடத்திலும் உள்ள எல்லா மக்களுடைய உதடுகளிலும் இருந்து இதை நான் கேட்டிருக்கின்றேன். "இதைப் பற்றி இன்னும் போதிய அளவுக்கு பேசுவது பரவாயில்லை" என்று கூறுவதற்கு இது பயன்படுத்தப்படுவது வளர்ந்து கொண்டுள்ளது. "என்னவாக இருந்தாலும்" என்பதே அவ்வார்த்தையாக உள்ளது.

பெற்றோர் ஒருவர், ஒரு பிள்ளையிடம், "நீ இதைச் செய்ய வேண்டும்!" என்று கூறுகின்றார், பிள்ளை உடனே, "என்னவாக இருந்தாலும்" என்று பதில் அளிக்கின்றான்/ள். வயது வந்த பெண்ணொருத்தி தனது தோழியை ஒரு சூழ்நிலையில் "சரியானதைச் செய்" என்று உற்சாகப்படுத்துகின்றாள், "என்னவாக இருந்தாலும்" என்பது பதிலாக உள்ளது. வயது முதிர்ந்த இருவர் அரசியலைப் பற்றி விவாதிக்கின்றனர், அவர்களில் ஒருவருக்குப் போதும் போதும் என்றாகி விடும் போது அவர் தம் தோள்களைக் குலுக்கி, "என்னவாக இருந்தாலும்" என்று கூறுகின்றார்.

இன்னும் அதிகம் தனிச் சிறப்பான ஒரு மட்டத்தில், "என்னவாக இருந்தாலும்" என்பது, உண்மை ஒரு பொருட்டல்ல என்று மக்களுக்கு அர்த்தப்படக்கூடும். உண்மையைப் பற்றிய உங்கள் கண்ணோட்டத்திற்கு நீங்கள் தகுதியானவர் என்றும், எனது கண்ணோட்டத்திற்கு நான் தகுதியானவன் என்றும் அது தெரியப்படுத்தக் கூடும், மற்றும் நாம் இருவருமே சம அளவில் சரியானவர்களே என்று நாம் யூகிக்கக்கூடும். 1990களில் அமெரிக்க நாட்டில் "என்னவாக இருந்தாலும்" என்பது கலாச்சாரத்தில் பொருளற்ற ஆர்வத்தை விட அதிகமானதாகவே இருந்தது; ஒரு நாடு சிந்திக்கும் வழிமுறையைச் சுட்டிக்காட்டும் ஒற்றை வார்த்தையாக அது இருந்தது. ஆர்வமிக்க இவ்வார்த்தை பற்றிய என்னுடைய மதிப்பீட்டைக் குறித்து நீங்கள் நினைப்பதென்ன? "என்னவாக இருந்தாலும்" என்று நீங்கள் கூறுவதை நான் கேள்விப்பட்டேனா?

நமது வேத பாடப் பகுதியாகிய 8:12-59ல் இயேசு, "என்னவாக இருந்தாலும்" என்ற ஆவிக்கு அறைகூவல் விடுத்தார். அவரது செய்தியானது

தைரியமானதாகவும், அவரது உரிமைகோருதல்கள் புறக்கணிக்கப்பட முடியாதவைகளாகவும் இருந்தன, முடிவில் மகிழ்ச்சி நிறைந்த "ஆம்!" என்ற வார்த்தையாலோ அல்லது எதிர்ப்பு நிறைந்த "இல்லை!" என்ற வார்த்தை யாலோ அவருக்கு நீங்கள் பதில் அளிக்கலாம் - ஆனால் "என்னவாக இருந்தாலும்" என்று நீங்கள் பதில் அளிக்க அவர் உங்களை அனுமதிக்க மாட்டார்.

## "நான் இருக்கிறேன்" என்ற சொற்றொடர்

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று 8:12ல் இயேசு அறிவித்தார். நவீன வாசகர்கள் அவருடைய கூற்றில், "உலகத்திற்கு ஒளி" என்ற பகுதியின்மேல் கவனம் செலுத்தும்படி சாய்ந்தாலும் இயேசு கூறியதன் மிக முக்கியமான அம்சமானது "நான் இருக்கிறேன்" என்ற இரு வார்த்தைகளில் காணப்படுகின்றது. அந்தச் சிறிய சொற்றொடரானது ஒரு வளம் மிக்க பழைய ஏற்பாட்டுப் பின்னணியைக் கொண்டுள்ளது; மற்றும் முதல் நூற்றாண்டில் இயேசுவின் உரையைக் கேட்ட யூதர்களுக்கு இது அவர் கூறியவற்றிலேயே மிகவும் முரண்பாடுள்ள கூற்றாக இருந்திருக்க லாம். அவர், "நானே தேவனாக இருக்கிறேன்" என்று கூறுவது போல அவர்களுக்கு ஒலித்தது. யோவான் சுவிசேஷத்தின் சந்தர்ப்பப் பொருளில், அவர் அதைத் தான் மிகச் சரியாகக் கூறினார்!

"நான் இருக்கிறேன்" என்பது பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மைப் பற்றிப் பேசிய வழிமுறையாக உள்ளது. எரியும் முட்புதரில் தேவன் மோசேயைச் சந்தித்த பொழுது, மோசே, அவருடைய பெயரைக் கேட்டார். அவருக்கு, "இருக்கிறவராக இருக்கிறேன்" (யாத். 3:14) என்று கூறப்பட்டது. பிற்பாடு, மோசேயின் பாடலில், தேவன் பின்வருமாறு அறிவித்தார்:

> நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை
> என்பதை
> இப்பொழுதே பாருங்கள்;
> நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன் ...
> (உபாகமம் 32:39).

சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, தீர்க்கதரிசியான ஏசாயா பின்வருமாறு எழுதினார்:

> நானே அவரென்று நீங்கள் உணர்ந்து,
> என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு,
> நீங்களும் நான் தெரிந்து கொண்ட என் தாசனும்
> எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;
> எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை;
> எனக்குப் பின் இருப்பதும் இல்லை
> (ஏசாயா 43:10).

*இதன் விளைவாக, "நான் இருக்கிறேன்" என்பது பரிசுத்த மொழியா யிருந்தது மற்றும் தேவனைத் தவிர வேறு யாரையாவது குறிக்கப் பயன் படுத்துதல் என்பது தேவ தூஷணமாக இருந்தது!*

## "நான் இருக்கிறேன்" என்று இயேசு கூறுகின்றார்

*யோவான் 8ல் இவ்வரலாறு தொடருகையில், இயேசு தம்மைத் தாமே குறிப்பிடுவதற்கு ''நான் இருக்கிறேன்'' (கிரேக்கம்: ego eimi) என்ற இருவார்த்தைகளை பயன்படுத்தத் தொடங்கினார்:*

> *நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் (8:12).*
>
> *நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன் (8:18).*
>
> *நான் உயர்விலிருந்துண்டானவன் (8:23).*
>
> *நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல (8:23).*

*இந்த மொழிநடையை அவர் பயன்படுத்திய ஒவ்வொரு வேளையிலும், அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் மன உளைச்சல் அடைந்திருக்க வேண்டும். இயேசு, தாம் தெய்வீகமானவர் என்று கூறாமல், தெய்வீகத்திற்குரிய மொழிநடையைப் பயன்படுத்தினார். இயேசு இதைக் காட்டிலும் அதிகமாய் எதையும் ஒருபோதும் கூறாதிருந்தால், அவர் இப்படிப்பட்ட மொழிநடையைப் பயன்படுத்தியதன் மூலம் எதனை அர்த்தப்படுத்தினார் என்று நாம் வியப்படைந்திருப்போம். இயேசு தம்முடைய உரிமைகோருதல்களைத் தெளிவாக்கியிருப்பதால், நிச்சயமாகவே, நாம் வியப்படைய வேண்டியதில்லை.*

*அதிகாரம் 8ல் யூதத் தலைவர்களுடனான தமது உரையாடலில் இயேசு, கோபத்தைக் கிளறிவிடக் கூடிய ''நான் இருக்கிறேன்'' என்ற இரு வார்த்தைகளை மும்முறை பயன்படுத்தினார். இயேசு தாம் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று இப்பொழுது நாம் அறிவது போலவே அப்பொழுதும் மக்கள் அறிந்தார்கள்: ''ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் [ego eimi] என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (8:24).*

*குழப்பம் தொடர்ந்தது, மற்றும் யூதர்கள் இயேசுவை, "நீர் யார்?" (8:25) என்று மீண்டும் கேட்டார்கள். அவர், "நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும் [ego eimi], நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்" (8:28) என்று பதில் அளித்தார்.*

*இந்த உரையாடலின் பதிவை யோவான் தொடருகையில், இயேசு "தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி" (8:31) பேசினார் என்று யோவான் சுட்டிக்காட்டினார்! அவர்கள், தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருந்ததாக வலியுறுத்தினர், மற்றும் அவர்கள் ஒருக்காலும் அடிமைத்*

*தனத்திற்குட்படாதவர்களாய் இருந்ததால், இயேசுவின் விடுதலையளிப்பு அவர்களுக்குத் தேவைப்பட்டிருக்கவில்லை என்றார்கள். இயேசு, தம்மைக் கொலை செய்ய அவர்கள் முயற்சி செய்தார்கள் என்று குற்றம் சாட்டிய பொழுது, அவர்கள், இயேசு ஒரு அசுத்த ஆவியைக் கொண்டிருப்பதாகக் கூறினர் (8:48). அவர்கள் இன்னும் அதிகமாய் வெறுப்படைகையில், தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று மீண்டும் உரிமைகோரினார்கள். இயேசுவின் நாட்களைக் கண்டிருந்த வேளையில் ஆபிரகாம் களிகூர்ந்திருந்தார் என்று இயேசு பதில் அளித்தார். ஆபிரகாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மரித்திருந்தார் என்பதால், இது எப்படி நடந்திருக்க முடியும் என்று அவர்கள் திகைப்படைந்தார்கள். இயேசு, "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் [ego eimi] என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (8:58) என்று பதில் அளித்தார்.*

*இது அவர்கள் தாங்கக் கூடுவதற்கும் அதிகமானதாயிருந்தது! அவர்கள் கற்களை எடுத்துக் கொண்டு, லேவியராகமம் 24:16ன்படி அவரைக் கல்லெறியத் திட்டமிட்டனர். இருப்பினும் இயேசு அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப் போனார். அவர் கூறியிருந்தவற்றின் தனிச்சிறப்பை ஒவ்வொருவரும் உணர்ந்தறிந்தனர்; அவர் தேவனுடன் ஒன்றாயிருப்பதாக, தேவகுமாரனாயிருப்பதாக, தெய்வீகமானவரா யிருப்பதாக தைரியமாக உரிமைகோரியிருந்தார்!*

## இன்றைய நாட்களில் இயேசுவின் உரிமைகோருதல்கள்

*இன்றைய நாட்களில் நாம் இயேசுவைப் பற்றி என்ன நினைக்கின் றோம்? இயேசு வாழ்ந்தார், மற்றும் அவர் ஒரு நல்ல மனிதராயிருந்தார் என்பதை ஏற்றுக் கொள்ள பெரும்பாலான மனிதர்கள் மனதாயிருக் கின்றனர், ஆனால் அவர் தேவகுமாரனாயிருக்கின்றார் என்பதைப் பல மக்கள் ஏற்றுக்கொள்ள மனதின்றியிருக்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு கண்ணோட்டத்தை இயேசு அபத்தமாக்குகின்றார். அவர் ஒரு நல்ல மனிதர் என்ற உரிமைகோருதலை மட்டும் ஏற்படுத்தாமல், "நான் இருக்கிறேன்" என்றும் அவர் உரிமைகோரினார். அவர் தம்மை ஒரு மாபெரும் தத்துவஞானியாக முன்னிறுத்தவில்லை; அவர் தம்மைப் பிதாவிடத்திற்குச் செல்லும் ஒரே வழியாக முன்னிலைப்படுத்தினார். அவர், தாம் தேவனுக்குள் ஒரு சிறப்பான உட்கண்ணோட்டம் கொண்டிருந்ததாகப் போதிக்கவில்லை; அவர் பிதாவுடன் ஒன்றாயிருந்ததாக உரிமைகோரினார். அவரது தைரியமான உரிமைகோருதல்கள் நம்மை அவரது உண்மை அடையாளத்தை விசுவாசிக்கும்படியாக அல்லது புறக்கணிக்கும்படியாக தெரிவு செய்து கொள்ளுதலை ஏற்படுத்தும்படி வற்புறுத்துகின்றன. இயேசுவிடம் வரும்பொழுது, "என்னவாக இருந்தாலும்" என்ற செயலானது ஒரு தெரிவாக இருப்பதில்லை. இந்த விஷயத்தில், தங்கள் கைகளில் கற்களுடன், தீவிரமான கோபத்திலிருந்த யூதத் தலைவர்கள், இயேசு என்ன*

கூறினார் என்பதை, இயேசு எவ்விதம் "ஒரு நல்ல மனிதராய்" இருந்தார் என்பது பற்றி, இன்றைய நாட்களில் பேசும் அவிசுவாசிகளைக் காட்டிலும் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருந்தனர்.

இதைக் குறித்து, ஜோஷ் மெக்டோவல் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இயேசுவுக்கு, ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர், அவர் யாராய் இருந்தார் என்று விசுவாசிப்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது. இயேசு கூறியதைக் கூறி, அவர் உரிமை கோரியதை உரிமைகோரும் ஒருவர், இயேசு ஒரு நல்லொழுக்கமுள்ள மனிதராக மட்டும் அல்லது தீர்க்கதரிசியாக மட்டும் இருந்தார் என்று முடிவு செய்ய முடியாது. மாற்றக் கருத்தென்பது தனிநபருக்குத் திறந்திருப்பதில்லை, மற்றும் அவ்வாறு இருக்கும்படி இயேசு ஒருக்காலும் விரும்பியதில்லை.[1]

பல ஆண்டுகளுக்கு முன்பு, C. S. லூயிஸ் அவர்கள் இதே போன்றதொரு முடிவுக்கு வந்தார்:

> அவரைப் பற்றி மக்கள் அடிக்கடி கூறுகின்றதான உண்மையில் மதியீனமாயுள்ள கருத்தை இவ்விடத்தில் நான் தடை செய்ய விரும்புகின்றேன்: "இயேசு ஒரு மாபெரும் நல்லொழுக்க போதகர் என்று ஏற்றுக்கொள்ள நான் தயாராயிருக்கின்றேன், ஆனால் தாம் தேவனாயிருக்கின்றதாக அவர் உரிமைகோருவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்." இந்த ஒரு காரியத்தை நாம் சொல்லக் கூடாது. வெறும் மனிதராக மட்டுமே இருந்து ஒருவர், இயேசு கூறிய வகையிலான விஷயங்களைக் கூறினால் அவர் ஒரு மாபெரும் நல்லொழுக்க போதகராயிருக்க முடியாது. அவர், ஒன்று பைத்தியம் பிடித்தவராக - அவிந்து போன முட்டை என்றுள்ள அளவுக்கு ஒரு மனிதனைப் பற்றிக் கூறுதலுக்கு ஏற்றவராக - இருக்க வேண்டும், அல்லது அவர் நரகத்தின் பிசாசாக இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் தெரிவு செய்தலை ஏற்படுத்தியாக வேண்டும். ஒன்று இம்மனிதர் தேவனுடைய குமாரனாய் இருந்தார் மற்றும் இருக்கின்றார்; அல்லது ஒரு பைத்தியக்காரனாக அல்லது அதிலும் மோசமான மனிதராய் இருந்தார். அவரை முட்டாள் என்று உங்களால் மூட முடியும், நீங்கள் அவர் மீது துப்பவும், பிசாசு பிடித்தவர் என்று அவரைக் கொல்லவும் கூடும்; அல்லது நீங்கள் அவருடைய பாதங்களில் விழுந்து, அவரை ஆண்டவரே, தேவனே என்று அழைக்கவும் முடியும். ஆனால், அவர் மாபெரும் மனித போதகர் என்பது போன்ற மதியீனமான ஆதரவை அவரது இருப்பிற்கு நாம் அளிக்காதிருப்போமாக. அதை அவர் நமக்குத் திறந்து வைத்திருக்கவில்லை. அவ்வாறு இருக்கும்படி அவர் விரும்பவுமில்லை.[2]

இயேசு தம்மைப்பற்றி ஏற்படுத்திய தைரியமான உரிமைகோருதல் களை ஒருவேளை, ஹோமர் ஹெய்லி அவர்கள் மிகச் சிறப்பாகத் தொகுத்துரைத்திருந்திருக்கலாம்: "அவர் தாம் உரிமைகோரியதன்படி யில்லாதவராய் இருந்தால், அவர் ஒரு வஞ்சகராக, தேவதூஷணம்

கூறுபவராக, ஒரு மாயக்காரராக, ஒரு மோசம் போக்குபவராக, ஒரு பொய்யராக இருந்தார் என்றே ஆகின்றது."[3]

## முடிவுரை

இவை யாவும் இன்றைய நாட்களில் நமக்கு எதை அர்த்தப் படுத்துகின்றது? முதலாவது, இது கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்திருப்ப வர்களை "இயேசு ஒரு மேன்மையான மனிதராய் இருந்தார்" என்று நம்பும் நிலைக்கு அப்பால், நமது சொந்த ஆவிக்குரிய மேம்பாட்டு நிலைக்குக் கடந்து செல்லும்படி நம்மை வற்புறுத்துகின்றது. எனது பிள்ளைகள் வளருகின்ற வேளையில், தொடக்க வயதில் அவர்கள், பிள்ளைகளிடத்தி லும் மற்றும் துன்புறும் மக்களிடத்திலும் இயேசு கொண்டிருந்த இரக்கம் மற்றும் கனிவினால் ஈர்க்கப்படும்படி விரும்புகின்றேன். இயேசுவைப் பற்றிய இவ்விதமான சித்தரிப்பைக் கொண்டுள்ளது நல்லதேயாகும். இருப்பினும் இயேசுவின் அந்தச் சித்தரிப்புக்கு அப்பால் எனது குழந்தைகள் வளராதிருந்தால், இயேசு மென்மையானவர் மட்டுமல்ல ஆனால் தைரியமானவரும், வற்புறுத்துபவருமாகவும் இருக்கின்றார் என்பதை அவர்கள் ஒருக்காலும் உணராதிருந்தால், அவர்களின் விசுவாசமானது முதிர்ச்சியடையத் தவறி விடும். இயேசு "நான் இருக்கிறேன்" என்பதாக உரிமைகோரினார். பழைய கூற்றொன்று உண்மையானதாக உள்ளது: "ஒன்று, இயேசு எல்லோருக்கும் கர்த்தராக இருக்கின்றார், அல்லது அவர் கர்த்தராகவே இல்லாமல் இருக்கின்றார்!"

யோவான் 8ல் இயேசுவுடனான சந்திப்பானது உறங்குகின்ற, பரிதாபமான கிறிஸ்தவர்களின் முகத்தில் அறைவது போல உள்ளது. அவர் தாம் கூறியவாறே இருக்கின்றாரா? அவர் அவ்வாறு இல்லையென்றால் நாம் எதற்காக இன்னமும் "சபை" என்ற செயல்பாட்டைக் கொண்டுள்ளோம்? அவர் அவ்வாறு இருக்கிறார் என்றால், கர்த்தராகிய இயேசுவைப் போல எனது வாழ்வில் பொருட் படுத்தப்பட வேண்டியது வேறெதுவும் இல்லை என்பது போல நாம் ஏன் இன்னும் வாழாமலும் ஊழியம் செய்யாமலும் இருக்கின்றோம்?

ஆராதனையில் கலந்து கொண்டிருந்தும், திங்கள் முதல் சனி வரையிலும் கிறிஸ்தவராக வாழாத ஆண் அல்லது பெண் ஒவ்வொரு வருக்கும் இயேசுவுடனான இந்த சந்திப்பானது முடிவெடுக்கும்படியான ஒரு அழைப்பாக உள்ளது. நாம் ஒவ்வொருவரும் விசுவாசத்தின் பக்கமோ அல்லது அவிசுவாசத்தின் பக்கமோ நின்றாக வேண்டும்.

இயேசுவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? அவர் ஒரு தேவதூஷணம் கூறுபவராயிருந்தாரா? அவர் ஒரு பொய்யராயிருந்தாரா? அவர் ஒரு பைத்தியம் பிடித்தவராயிருந்தாரா? அவர் கர்த்தராக இருக்கின் றாரா? நீங்கள் முடிவு செய்ய வேண்டும்! "என்னவாக இருந்தாலும்" என்பது ஒரு தெரிவு அல்ல!

குறிப்புகள்

[1]Josh McDowell, *More Than a Carpenter* (Wheaton, Ill.: Living Books, 1977), 25. [2]C. S. Lewis, *Mere Christianity* (New York: Macmillan Co., 1943), 55-56. [3]Homer Hailey, *That You May Believe* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 25.

## *"உவமை" (10:6)*

"உவமை" (Parable) என்ற வார்த்தையானது ஒப்பிடுவதற்கு "அருகாக வைத்தல்" என்ற நேரடியான அர்த்தம் கொண்ட *parabole* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது. இவ்வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் ஐம்பது முறைகள் காணப்படுகின்றது - அவைகளில் இரண்டைத் தவிர மற்ற யாவையும் கருத்தொற்றுமை சுவிசேஷங்களிலேயே உள்ளன (மற்ற இரண்டும் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளன).

அவ்வார்த்தையானது யோவான் சுவிசேஷத்தில் இருப்பதில்லை, எனவே "parable" என்பது ஆங்கிலத்தில் உள்ளதாயிராது. 10:6ல் கிரேக்க வார்த்தை *paroimia* என்பதாகும். 2 பேதுரு 2:22ல் இது "proverb" என்று அர்த்தப்படுகின்றது, இது பழங்காலக் கிரேக்க இலக்கியத்தில் இதன் பொதுவான மரபுச் சொற்றொடரைக் கொண்டுள்ளது. அவ்வசனப் பகுதி தவிர, இது யோவான் சுவிசேஷத்தில் (புதிய ஏற்பாட்டில்) மட்டுமே காணப்படுகின்றது (10:6; 16:25, 29). இவ்விடத்தில் இது "விளக்கம் தேவைப்படுகிற 'மறைவான, தெளிவற்ற பேச்சு' " என்று அர்த்தப் படுகின்றது.[1] யோவான் 10:1-5ல் நாம் பெறுவது ஒரு "உவமை" (parable) அல்ல, ஆனால் அது ஒரு "உருவகம்" (allegory) ஆகும். *Paroimia* என்பது "பேச்சின் உருவகம்" என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (NASB, NIV). யோவான் சுவிசேஷத்தில் உவமைகள் எதுவும் இல்லை என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

*Word Meanings in the New Testament,* vol. 2
ரால்ஃப் ஏர்ல்

குறிப்பு

[1]Friedrich Hauck, *"paroimia,"* in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Friedrich, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 5:856.